தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகம், புதுவையில் இன்று சில இடங்களில் மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

தமிழகம், புதுவையின் சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ செவ்வாய்க்கிழமை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக இருக்கும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும். திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் சின்னக்கல்லாறு, தம்மம்பட்டி, சென்னையில் 30 மி.மீ. மழை பெய்துள்ளது. வால்பாறை, கடலூர், ஆத்தூர், செங்கல்பட்டில் 20 மி.மீ. மழையும், மகாபலிபுரம், எண்ணூர், ஓமலூர், ஊட்டி, கோபிசெட்டிபாளையம், பண்ருட்டியில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

### மேட்டூர் அணைக்கு 23 ஆயிரம் கன அடி நீர்வரத்து

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திங்கள்கிழமை 23,343 கன அடியாக இருந்தது. கர்நாடக மாநிலத்தில் கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், அந்த அணைகளில் இருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. இதையடுத்து, கடந்த நான்கு நாள்களாக நீர்வரத்து அதிகரித்து வருவதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 103.70 அடியாக இருந்தது. நீர்வரத்து நொடிக்கு 23,343 கன அடியாக இருந்தது. எனவே, அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலைக்குள் 104 அடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அணையிலிருந்து பாசனத்துக்காக நொடிக்கு 20,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 69.72 டி.எம்.சி.யாக இருந்தது. ஒகேனக்கல் ஆற்றில் நீர்வரத்து

சரிவு: ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து திங்கள்கிழமை நொடிக்கு 16 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது. ஒகேனக்கல் காவிரியில் கடந்த மூன்று நாள்களாக 35 ஆயிரம் கன அடி வரை நீர்வரத்து இருந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை அருவிக்கு வரும் நீர்வரத்து குறைந்தது. இருப்பினும், அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க விதிக்கப் பட்டிருந்த தடை தொடர்ந்து நான்காவது நாளாக நீடித்தது.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

திருத்துறைப்பூண்டி ரோட்டரி சங்கம், கால்நடை பராமரிப்புத் துறை ஆகியன இணைந்து மேட்டுப்பாளையம் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை கால்நடை மருத்துவ முகாமை நடத்தின. மேட்டுப்பாளையம் ஊராட்சி முருகம்பாளையம், தானந்தாங்கி, கீழச்சேரி பகுதிகளில் நடைபெற்ற இந்த முகாமுக்கு ரோட்டரி சங்கத் தலைவர் ராஜாராம், சேர்மன் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமை வகித்து முகாமைத் தொடங்கி வைத்தனர். முகாமில் கால்நடை மருத்துவர்கள், ராமலிங்கம், காவியா, சுரேந்தர் ஆகியோர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் சோதனை மேற்கொண்டனர். இதில் 665 கால்நடைகளுக்கு வாய் மற்றும் கால்நோய்க்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும், இந்த முகாம் 10-ம் தேதி கட்டிமேடு, நெடும்பலம், ஆதிரெங்கம் ஊராட்சியிலும், 11-ம் தேதி சேகல், பாமணி, தேசிங்குராஜபபுரம் ஊராட்சிகளிலும், 19-ம் தேதி மேலமருதூர், பிச்சன்கோட்டம் ஊராட்சிகளிலும் நடைபெறவுள்ளது. எனவே, கால்நடை வளர்ப்போர் இந்த முகாமை பயன்படுத்தி பயன் பெற வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருக்கோவிலூர் அருகே செல்லங்குப்பம் கிராமத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் அண்மையில் நடைபெற்றது. மணலூர்பேட்டை கால்நடை மருத்துவமனையும், அரிமா சங்கமும் இணைந்து முகாமை நடத்தின. முகாமுக்கு அரிமா சங்கச் செயலர் முருகன் தலைமை வகித்தார். ஆலோசகர் எஸ்.குழந்தைவேலு, பொருளாளர் பரதன், உறுப்பினர் துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை மருத்துவர் நரேந்திரன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் 295 மாடுகளுக்கு

கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். கால்நடை மருத்துவ மாணவர் விக்னேஷ், கால்நடை ஆய்வாளர் பத்மாவதி, உதவியாளர்கள் கலைச்செல்வி, பொம்மி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கால்நடைகளை சிறப்பாக பராமரித்து வந்த 10 பேருக்கு அரிமா சங்கம் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உழவார பணி**

குரங்கணி முத்துமாலை அம்மன் கோவிலில் திருச்செந்தூர் பாரத உழவார பணி குழுவினர் சார்பில் உழவார பணி நடந்தது. கோவில் வளாகம், மேற்கூரை, காம்பவுண்டு சுவர் ஆகியவற்றை சுத்தம் செய்தனர். உழவார பணி குழு தலைவர் அகிலன், செயலாளர் ரங்கன், பொருளாளர் கிருஷ்ணன், கோவில் நிர்வாக அதிகாரி க.சிவராம் பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**69 பேருக்கு விலையில்லா வெள்ளாடுகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்**

மண்ணச்சநல்லூர் தாலுகா தீராம்பாளையத்தில் அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன் தலைமை தாங்கினார். தீராம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் கிரிபால் முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் வரவேற்புரை ஆற்றினார். அமைச்சர் டி.பி. பூனாட்சி சிறப்புரை ஆற்றி 69 குடும்பங்களுக்கு அரசின் விலையில்லா வெள்ளாடுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் வக்கீல் ரத்தினவேல், அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் என்ஜினீயர் ஜெயகுமார், மாவட்ட ஆவின் பால்வள இயக்குனர் எஸ்.எம். ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் மூக்கன், ஒன்றிய கவுன்சிலர் கதிர்வேலு, ஒன்றிய இளைஞர் இளம்

பெண்கள் பாசறை செயலாளர் அய்யம்பாளையம் ஜி. ரமேஷ் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்கிறது</u>**

ஒகேனக்கல்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையால், கர்நாடக அணைகள¤ல் இருந்து உபரிநீர் முழுமையாக காவிரியில் திறந்து விடப்படுகிறது. இதனால் ஒகேனக்கல்லில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதே போல், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்திருப்பதால் அணையின் நீர் மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 103.70 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 23,343 கனஅடி நீர் வந்து கொண்டிருந்த நிலையில், டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 20 ஆயிரத்து 900 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

**<u>தர்மபுரியில் 2,200 டன் வேப்பங்கொட்டை கொள்முதல்</u>**

அரூர்: தர்மபுரி மாவட்டத்திலிருந்து ஆண்டிற்கு 2200 டன் வேப்பங்கொட்டை கொள்முதல் செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் அனைத்து தானிய மண்டிகளிலும் வேப்பங்கொட்டை கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு ஒரு கிலோ கொட்டை ரூ.32க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு கிலோ ரூ.25க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. வியாபாரிகள் கூறுகையில், தர்மபுரி மாவட்டத்தில் சென்ற ஆண்டு மட்டும் 2,200 டன் வேப்பங்கொட்டையை தனியார் கம்பெனிகள் கொள்முதல் செய்துள்ளன. மழை குறைவு காரணமாக விவசாய இடு பொருட்கள் வாங்கும் அளவு குறையும்

என்பதால் உர கம்பெனிகள் குறைவான அளவிற்கே வேப்பங்கொட்டைகளை கொள்முதல் செய்யும் நிலை உள்ளது. இதனால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலை குறைந்துள்ளது, என்றனர். மருந்து கம்பெனிகளும், உரம் தயாரிக்கும் கம்பெனிகளும் வேப்பங்கொட்டை மொத்தமாக கொள்முதல் செய்கின்றன.

**<u>சம்பா, தாளடியில் திருந்தியநெல் முறையை பின்பற்றி அதிக மகசூல் பெற அழைப்பு மானியத்தில் முன்னுரிமை</u>**

நீடாமங்கலம், : இந்தியாவில் நீர் பயன் பாட்டில் 75 சதவீதம் விவசாயத்திற்கும், அதில் 70 சதம் நெல் பயிருக்கே செலவாகிறது. எனவே பாசன நீரை சிக்கனமாக கடைபிடித்து அதிக மகசூல் எடுக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.நீடாமங்கலம் வேளா ண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது: திருந்திய நெல் சாகுபடி முறையில் ஏக்கருக்கு 3 கிலோ விதை போது மானது. ஒற்றை நாற்று களை நடவு செய்வதாலும், முக்கால் அடிக்கு முக்கால் அடி இடைவெளி விட்டு நடுவதாலும் ஒரு சதுர மீட்டருக்கு 16 பயிர்கள் இருப்பதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 64 ஆயிரம் பயிர் தூர் இருக்கும். 14 முதல் 15 நாட்கள் வயது நாற்றுகளை நட வேண்டும். நடவு செய்த 20, 30 மற்றும் 40வது நாட்களில் கோணாவீடர் களை கருவியை ஓட்ட வேண்டும். ஒரு ஏக்கரில் களை கருவியை பயன்படுத்த 6 பேர் போதும்.திருந்திய நெல் சாகுபடி முறையை பின் பற்றி பயிர் செய்தால் அதிக களை தூர் கட்டுவதோடல்லாமல் அனைத்து தூர்களிலும் கதிர் உருவாகி ஒவ்வொரு கதிரிலும் நெல் மணிகள் எண்ணிக்கையும், எடையும் அதிகரிக்கும். மேலும் அதிக மழை காற்றிலும், சாயாமல் நிற்கும். இதனால் மகசூல் அதிகரிக்கிறது. நீர் தேவை குறையும். திருந்திய நெல் சாகுபடி முறையில் ஆடுதுறை 38,39,46, கோ 43, பி.பி.டி.5204, எம்.டி.யு. 7029, கோ.50, ஏடிடி 49 போன்ற ரகங்களை பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்க முடியும். திருந்திய நெல் சாகுபடி முறையை கடை வயது 15 நாட்களாக குறைகிறது. நாற்று பறிக்கும் செலவு, நடவுக்கான ஆட்கள் தேவை, பாசன நீர் தேவை குறைகிறது. எலித் தொல்லை இருப்பதில்லை. பயிர் சாய்வதில்லை.மொத்தத்தில் மகசூல் அதிகரிப்பதன் மூலம்

விவசாயிகளுக்கு லாபம் அதிகரிக்கிறது. இந்தியாவில் நீர் பயன்பாட்டில் 75 சதவீதம் விவசாயத்திற்கும், அதில் 70 சதம் நெல் பயிருக்கே செலவாகிறது. எனவே பாசன நீரை சிக்கனமாக கடைபிடித்து காய்ச்சலும், பாய்ச்சலுமாக பாசன நீரை பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்கலாம். திருந்திய நெல் சாகுபடி முறைகளை பின்பற்றும் விவசாயிகளுக்கு மட்டுமே மானியம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். எனவே சம்பா மற்றும் தாளடி பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி முறைகளை பின்பற்றி அதிக மகசூல் எடுக்க ஆயத்தமாகுங்கள் என விவசாயிகளை வேளாண் இணை இயக்குனர் இளஞ்செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## <u>சிறு-குறு விவசாயிகளுக்கு மானியங்கள் அறிவிப்பு</u>

பழநி, : சிறு-குறு விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட உள்ள தாக வேளாண் துறையினர் அறிவித்துள்ளனர். பழநி பகுதியில் கடந்த சில நாட்களுக்கு பெய்த மழை காரணமாக விவசாய பணிகள் துவங்கி உள்ளன. வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ஏராளமான மானியங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 5 ஏக்கர் புன்செய் நிலம் உள்ள விவசாயி சிறு விவசாயி என்றும், 2.5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்துள்ள விவசாயி குறு விவசாயி என்ற அடிப்படையில் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இதன்படி சிறு-குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளின் நிலங்களில் 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் பண்ணை குட்டை ஏற்படுத்தி தரப்பட உள்ளது.15 மீட்டர் அகலம் மற்றும் 2 மீட்டர் ஆழத்தில் அமைக்கப்பட உள்ள பண்ணைக்குட்டை தேவைப்படும் விவசாயிகள் வேளாண் அலுவலகத்தில் விண்ணப்பித்தால், யூனியன் அலுவலகம் மூலம் மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பண்ணைக்குட்டை அமைத்து தரப்படும். இதுதவிர, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் விதை கிலோ ரூ.5க்கு மானியமாக வழங்கப்படுகிறது. விதை கிராம திட்டத்தின் கீழ் நெல், நிலக்கடலை மற்றும் பயறு வகை விதைகள் 50% மானியத்தில் வழங்கப்படுகின்றன. நீர், நிலவள திட்டத்தின் கீழ் அய்யம்புள்ளி மற்றும் கணக்கன்பட்டி பகுதி விவசாயிகள் 10 அடி அகலம், 3 அடி நீளத்தில் மண்புழு கூடம் அமைக்க ரூ.10 ஆயிரம் மானியமாக

வழங்கப்படுகிறது. துவரை செயல்விளக்க திடல் அமைக்க 1 ஹெக்டேருக்கு ரூ.7500 மானியமாக வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நீர்த்தெளிப்பான் மற்றும் நீர் தூவுவான் ஆகியவை 50% மானியத்தில் வழங்கப்பட உள்ளது. டான்கோடா திட்டத்தின் கீழ் தென்னை, மக்காச்சோளம், கரும்பு, பருத்தி மற்றும் துவரை பயிரிடும் விவசாயிகளுக்கு 100% மானியத்தில் சொட்டு நீர் பாசனம் ஏற்படுத்தி தரப்பட உள்ளது. இதுதொடர்பான விளக்கங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை யோ தொடர்பு கொள்ள லாம் என பழநி வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகள் குறை தீர்வு கூட்டத்திற்கு மனு அனுப்பலாம் கலெக்டர் தகவல்

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி இந்த மாதத்திற்கான (செப்டம்பர்) மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் வருகிற 19ம் தேதி காலை 10 மணியளவில் கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர்.எனவே விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பொது கோரிக்கைகள் இருப்பின் அதன் விவரம் குறித்த மனுக்களை வருகிற 12ம் தேதிக்குள் (வெள்ளிக்கிழமை) திருவண்ணாமலை கலெக்டருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.அதே போல கலெக்டர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம் மற்றும் வேளாண்மை துறை அலுவலகங் களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்ப பெட்டிகளிலும் மனுக்களை போடலாம். இந்த தகவலை கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## மாவட்டத்தில் நீர்ப்பாசன செயல்பாடு பொறியாளர்கள் குழு பார்வையிட்டது

ஈரோடு, : தமிழக அரசின் பொதுப்பணித்துறை சார்பில் திருச்சி

துவாக்குடியில் பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் திருச்சி, சென்னை, நெல்லை, தர்மபுரி, கோவை, ஈரோடு, தேனி, சிவகங்கை, மதுரை மாவட்டங்களில் பணியாற்றி வரும் நீர்வள ஆதார அமைப்பின் உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் கோவை, ஈரோடு, சேலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் பாசன திட்டங்கள், வாய்க்காலில் நீர்நிர்வாக முறைகள், அணைக்கட்டுகள், பாசன அமைப்புகள் செயல்படும் முறைகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டனர். பாசன மேலாண்மை பயிற்சி நிலைய செயற்பொறியாளர் நேரு தலைமையில் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்மின் நிலையம், கல்லாறு பழப்பண்ணை, ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானிசாகர் அணை, கொடிவேரி அணை ஆகியவற்றை பார்வையிட்டு அணை பற்றிய நீரியல் விபரங்களை சேகரித்து கொண்டனர்.

## <u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி ஒன்றியம், வெஞ்சமாங்கூடலூர் கால்நடை மருந்தகம் நாச்சிபாளயம் புதூர் கிராமத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இதில் 150 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.அரவக்குறிச்சி ஒன்றியம், வெஞ்சமாங்கூடலூர் ஊராட்சி, உப்புக்கரை கிராமத்தில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமை வெஞ்சமாங்கூடலூர் தொடக்க வேளான்மை கூட்டுறவு வங்கித் தலைவர் பாலசுப்பிரமணி துவக்கிவைத்தார். முகாமில் வெஞ்சமாங்கூடலூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் நாகராஜன் தலைமையில், உதவியாளர் சுரேந்தர் கால்நடை ஆய்வாலர்கள் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினரால் 150 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

## <u>கோமாரிநோய் தடுப்பூசி முகாம்</u>

பாபநாசம், : பாபநாசம் அடுத்த அன்னுக்குடி ஊராட்சி உத்தாணியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. முகாமை அன்னுக்குடி ஊராட்சி தலைவர் சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். குருசாமி

முன்னிலை வகித்தார். முகாமில் 215 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. சந்திரசேகரபுரம் கால்நடை உதவி மருத்துவர் கார்த்திக், கால்நடை பராமரிப்பு உதவியாளர் செந்தில் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். தலைமை அலுவலக உதவி இயக்குனர், கண்காணிப்பாளர் அயூப்கான் ஆகியோர் முகாமை பார்வையிட்டனர்.

## பட்டர்பீன்ஸ், காரட் விலை அதிகரிப்பு

மதுரை, : தொடர் மழை காரணமாக பட்டர் பீன்ஸ், காரட் உள்ளிட்ட காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. மதுரை மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்றைய விலை விவரம்: கத்தரிக்காய் ரூ.25தக்காளி(நாடு) ரூ.30தக்காளி (உருட்டு) ரூ.20 வெண்டைக்காய் ரூ.8பீர்க்கங்காய் ரூ.15புடலங்காய் ரூ.10பெரியபாகற்காய் ரூ.25சிறிய பாகற்காய் ரூ.40சுரைக்காய் ரூ.7வெள்ளை பூசணி ரூ.7சர்க்கரை பூசணி ரூ.12கொத்தவரங்காய் ரூ.7அவரைக்காய் ரூ.7மிளகாய் (நாடு) ரூ.25குடை மிளகாய் ரூ.40பஜ்ஜி மிளகாய் ரூ.50முள்ளங்கி ரூ.7முருங்கைக்காய் ரூ.25மல்லி ரூ.10புதினா (ஒரு கட்டு) ரூ.15கருவேப்பிலை ரூ.20சேணைக்கிழங்கு ரூ.25சேம்பு ரூ.30 கருணைக்கிழங்கு ரூ.60பல்லாரி ரூ.25 முதல் ரூ.30சிறிய வெங்காயம்ரூ. 25 முதல் ரூ.30உருளைக்கிழங்கு ரூ.30காரட் ரூ.25பீட்ரூட் ரூ.10 முதல் ரூ.12பீன்ஸ் ரூ.45பட்டர் பீன்ஸ் ரூ.100 (ரூ.70)சோயா பீன்ஸ ரூ.70முட்டைக்கோஸ் ரூ.15 காலி பிளவர்(ஒரு பூ) ரூ.15 முதல் ரூ.20நூக்கல் ரூ.15 டர்னிப் ரூ.20சவ் சவ் ரூ.20இஞ்சி (புதியது) ரூ.40இஞ்சி (பழையது) ரூ. 70 மதுரை மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட் அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் ரவிச்சந்திரன் கூறுகையில், ‘கொடைக்கானல் பகுதியில் தொடர் மழை காரணமாக பட்டர் பீன்ஸ், காரட் உள்ளிட்ட காய்கறிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டு விலை உயர்ந்து வருகிறது“ என்றார்.

## இயற்கை வேளாண்மை தொழில்நுட்ப களப்பயிற்சி விவசாயிகள் பங்கேற்பு

ராமநாதபுரம், : இயற்கை வேளாண்மை, தொழில்நுட்ப களப்பயிற்சி ராமநாதபுரம் எட்டிவயல் கிராமத்தில் நடந்தது. ராமநாதபுரத்தில் தரணி விவசாய ஆராய்ச்சி மற்றும் கிராமப்புற மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 2 நாள் பயிற்சி எட்டிவயல் விவ சாய ஆராய்ச்சி பண்ணை யில் நடந்தது. கலெக்டர் நந்தகுமார் பயிற்சியை தொடங்கி வைத்தார். தரணி விவசாய ஆராய்ச்சி கிராமப்புற மேம்பாட்டு அறங்காவலர் தரணி முருகேசன் வரவேற்றார். ராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, மண்டபம், திருவா டானை, போகலூர், புதுக் கோட்டை, திருச்சி, மதுரை மற்றும் திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் களப்பயிற்சியில் பங்கேற்றனர். சிறுதானிய உற்பத்தி, மறுமதிப்பு கூட்டுதல், விளக்கத்தை பரமக்குடி ரமேஷ், திட்ட அமைப்பு இயக்குனர் மதுரை கண் ணன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் செயல்விளக்க பயிற்சி, பஞ்சகவ்யம் தயாரித்தல், மீன்அமிலம், அமுதக்கரைசல், தேமோர் கரைசல், மூலி கைப் பூச்சி விரட்டி, மக்கு உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மூடாக்கு, இருமடிப்பாத்தி அமைத்தல் உள்ளிட்ட செயல்விளக்கத்தை அட்மா தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் செயல்விளக்க பயிற்சி அளித்தார். ஒருங்கிணைந்த பண் ணையம் அனுபவ பகிர்வு குறித்து ராசா, பூச்சியியல் வல்லுநர் செல்வம், காளான் வளர்ப்பு அருள்தாமஸ், காலி இடங்களில் தோட் டம் அமைத்தல் குறித்து விவசாயி சிவா ஆகியோர் பங்கேற்று பேசினர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முட்டை விலை 320 காசாக நிர்-ணயம்

நாமக்கல்:தமி-ழகம் மற்றும் கேர-ளாவில், முட்டை கொள்-முதல் விலை,

320 காசு-க-ளாக நிர்-ணயம் செய்-யப்-பட்டுள்-ளது.நாமக்-கல்லில், தேசிய முட்டை ஒருங்-கி-ணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்-தது. முட்டை உற்-பத்தி, மார்க்கெட் நில-வரம் குறித்து, பண்-ணை-யா-ளர்கள் விவா-தித்-தனர். அதை-ய-டுத்து, முட்டை கொள்-முதல் விலையில், 315 காசு-க-ளுக்கு விற்-பனை செய்-யப்-பட்ட முட்டை, ஐந்து காசு அதி-க-ரித்து, 320 காசு-க-ளாக நிர்-ணயம் செய்-யப்-பட்-டது.நாட்டின் பிற மண்-ட-லங்-களில், முட்டை விலை (காசு-களில்) நில-வரம்:சென்னை, 350, பெங்-க-ளூரு, 340, மைசூரு, 338, ஐத-ராபாத், 313, மும்பை, 350, விஜ-ய-வாடா, 315, கோல்-கட்டா, 367, பர்-வாலா, 315, டில்லி, 330.இவ்-வாறு, நிர்-ணயம் செய்-யப்-பட்டு உள்-ளது.நாமக்-கல்லில், நேற்று நடந்த பண்-ணை-யாளர், வியா-பா-ரிகள் ஒருங்-கி-ணைப்புக் குழுக் கூட்-டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 58 ரூபா-யாக நிர்-ண-யிக்-கப்-பட்-டது. பல்-ல-டத்தில் நடந்த கறிக்-கோழி உற்-பத்-தி-யாளர் ஒருங்-கி-ணைப்புக் குழுக் கூட்-டத்தில், அதன் விலை கிலோ, 77 ரூபா-யாக நிர்-ணயம் செய்-யப்-பட்-டது.

## <u>புதினா சாகுபடிக்கு ஏற்ற ஜவ்வாது மலை</u>

திருவண்ணாமலை: புதினா சாகுபடிக்கு ஏற்ற இடமாக, ஜவ்வாதுமலை விளங்கி வருகிறது, என, விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் அதிகாரி தெரிவித்தார். ஜம்னாமரத்தூர் வேளாண்மை விரிவாக்க மையத்தின் சார்பில், அட்மா திட்டத்தின் கீழ் புதினா சாகுபடி குறித்து, மலை வாழ் விவசாயிகளுக்கான, ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சி முகாமுக்கு, அட்மா திட்ட வேளாண்மை துணை இயக்குனர் கருணாகரன் தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் சுந்தரம் வரவேற்றார். மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பழனிவேல், புதினா சாகுபடி குறித்து பேசினார். இந்தியா கிராம மேம்பாட்டு நிறுவன தலைவர் லட்சுமணன் பயிற்சி முகாமை துவக்கி வைத்து பேசியதாவது:

ஜவ்வாது மலையில் எவ்வளவு மழை பெய்தாலும், அந்த மழை நீர் தேங்காமல் வெளியேறி விடும். எனவே, இது போன்ற பகுதிகளில் புதினா

பயிர் சாகுபடி செய்வதற்கு ஏற்ற பகுதியாகும். புதினா சாகுபடி ஆண்டுக்கு குறைந்தபட்சம், ஐந்து முறை அறுவடை செய்யலாம். புதினா இலைகளை, நீராவி முறையில் எண்ணெயாக மாற்றும்போது, ஒரு லிட்டர் எண்ணெய்க்கு, 1,500 ரூபாய்க்கு விற்பனையாகும். சந்தை வாய்ப்பும் பிரகாசமாக உள்ளது. எனவே, புதினா சாகுபடி மற்றும் எண்ணெய் தயாரிப்பு முறைகளை, இங்குள்ள விவசாயிகள் தெரிந்து கொண்டு, அனைத்து விவசாயிகளும் ஒன்று சேர்ந்து, புதினா சாகுபடி துவங்கினால், குறைந்தபட்சம், ஒரு ஏக்கருக்கு, ஓராண்டுக்கு, ஒரு லட்சத்திற்கு மேல் லாபம் கிடைக்கும். ஏற்கனவே செய்து வரும் பழைய சாகுபடி முறைகளை கைவிட்டு நல்ல வருமான வாய்ப்பு உள்ள புதினா சாகுபடிகளை, மலைவாழ் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். ஜவ்வாது மலை வேளாண்மை உதவி இயக்குனர் ஆல்பர்ட் ராபின்சன், வேளாண்மை அலுவலர் சுதாகர், வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வபாண்டியன், உதவி வேளாண்மை அலுவலர் மரியஜோசப், அட்மா தொழில்நுட்ப வல்லுனர் பிரேம், பாஸ்கர், உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**<u>மானாவாரி கம்பு மகசூல் அமோகம் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

தியாகதுருகம்: தியாகதுருகம் பகுதியில் சாகுபடி செய்த மானாவாரி கம்பு மகசூல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் இவ்வாண்டு 4,000 ஏக்கர் பரப்பில் மானாவாரி கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை தாமதமாக பெய்தாலும் கிடைத்த ஈரத்தை பயன்படுத்தி விதைப்பு பணிகளை முடித்தனர். அவ்வப்போது பெய்த மழையால் செடிகள் செழித்து வளர்ந்து கதிர்விட்டது. தற்போது பூத்து மணிகள் முற்றும் தருவாயில் உள்ளது. கடந்த ஆண்டு கம்பு பயிரிட்ட பலருக்கும் நல்ல லாபம் கிடைத்தது. இவ்வாண்டும் கம்பு மகசூல் அதிகம் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தீவனத்திற்கு முக்கிய மூலப்பொருளாக கம்பு பயன்படுத்தினாலும், சமீப காலமாக கம்பு மூல ம் தயாரிக்கும் உணவுகளை உடல் ஆரோக்கியத்திற்காக பலர் விரும்பி சாப்பிடுகின்றனர். மக்கள் கூழ் குடிப்பதும் அதிகரித்து வருகிறது.

இதனால் கம்புக்கு நல்ல விலை கிடைக்கிறது. மானாவாரி கம்பு சாகுபடி செய்த விவசாயிகள் கூடுதல் லாபம் ஈட்ட முடியும்.

## கோமாரி நோய் தடுப்பு முகாம்

கண்டாச்சிபுரம்: கண்டாச்சிபுரம் கால்நடை மருத்துவமனை சார்பில் வீரங்கிபுரம் கிராமத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பு முகாம் நடந்தது. டாக்டர் அருண் தலைமை தாங்கினார். வீரங்கிபுரம், புதுப் பாளையம் கிராமங்களைச் சார்ந்த 300க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. பயிற்சி கால்நடை ஆய்வாளர் தமிழரசி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் நதியா, ஊராட்சித் தலைவர் சுதா வேல்முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வாழைத்தார் சாகுபடி பரப்பு குறைவு: வரத்து சரிவால் விலை அதிகரிப்பு

ப.வேலூர்: கடந்தாண்டு ஏற்பட்ட வறட்சியால், வாழை சாகுபடி பரப்பு குறைந்துள்ள நிலையில், அதன் வரத்து குறைந்து, விலை இருமடங்கு உயர்ந்துள்ளது. ப.வேலூர் காவிரி கரையோரப் பகுதிகளான, பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, பிலிக்கல்பாளையம், ஜேடர்பாளையம், சோழசிராமணி, அணிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, பொய்யேரி, குப்புச்சிப்பாளையம், ஓலப்பாளையம், பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கரில், வாழை சாகுபடி செய்யப்படும். ஆனால், கடந்தாண்டு போதிய அளவு மழை பெய்யாததால், சாகுபடி பரப்பு பாதியாக குறைக்கப்பட்டது.

இங்கு, பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சநாடன், மொந்தன் போன்ற ரகங்கள் விளைவிக்கப்படுகிறது. அறுவடை செய்யும் வாழைத்தார்களை, ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து, ஏலம் விடுகின்றனர். அவற்றை, கரூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, ராயக்கோட்டை போன்ற பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்து, வெளியூர்களுக்கு, விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். இந்நிலையில், நேற்று நடந்த வாழைத்தார் ஏலத்தில், 1,500 தார் வரவேண்டியது, வெறும், 300 தார் மட்டுமே வந்தது.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்ததால், வாழைத்தார் விலை, இரு மடங்கு உயர்ந்தது.
கடந்த வாரம், 350க்கு விற்பனையான பூவன் வாழைத்தார், நேற்று நடந்த ஏலத்தில், 500 ரூபாய்க்கு ஏலம் போனது. 200க்கு ஏலம் போன ரஸ்தாளி, 350க்கும், 200க்கு விற்பனை செய்யப்பட்ட, கற்பூரவள்ளி, 300க்கும், 300க்கு விலை போன, பச்சநாடன், 500க்கும், ஆறு ரூபாய்க்கு விற்பனையான, மொந்தன் வாழைக்காய் ஒன்று, பத்து ரூபாய்க்கும் ஏலம் போனது. தற்போது, திருமணம், திருவிழா போன்ற பல்வேறு விசேஷங்கள் துவங்கியுள்ள நிலையில், சாகுபடி பரப்பு குறைந்ததால், வாழைத்தார் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால், வெளியூரை சேர்ந்த வியாபாரிகளும் அதிகளவில் வந்து போட்டி போட்டு ஏலம் எடுத்ததால், வாழை விவசாயிகளை, மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## <u>பயிர்களுக்கு ஆராய்ச்சி மையம் அவசியம்; கூடலூர் விவசாயிகள் கோரிக்கை</u>

கூடலூர் : கூடலூர் பகுதியில், ஒரே இடத்தில் பயிரிட்டுள்ள பலவிதமான விவசாய பயிர்களின் "பசுமையான காட்சி' அனைவரையும் கவர்ந்து வருகிறது.நீலகிரி மாவட்டம், கூடலூர் மலைகள் மற்றும் வயல் நிலங்களும் கொண்ட நிலப்பரபாகும். இதனால், மலைப் பகுதிகளில் தேயிலை, காப்பி, ஏலம் போன்ற பயிர்களையும் அதன் நடுவே குறுமிளகு, பாக்கு, கிராம்பு போன்ற பயிர்களை ஊடு பயிராக பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர்.வயல் நிலங்களில் பாக்கு, ஏலம் போன்ற நீண்ட கால பயிர்களை தவிர, பருவமழை காலத்தில் நெல், நேந்திரன் வாழை, இஞ்சி போன்றவைகளும், கோடையில் காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர்.இதற்கு, இங்குள்ள மண்வளமும், காலநிலை மற்றும் நீர் வளமும் முக்கிய காரணமாகும். பருவமழையை தொடர்ந்து, தற்போது வயல்களில் நேந்திரன் வாழை, இஞ்சி மற்றும் நெல் ஆகியவை ஒரே இடத்தில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இவைகளின் பசுமையான அழகு இவ்வழியாக செல்லும் அனைவரயும் கவர்ந்து வருகிறது."இப்பகுதியின் மண்வளம், நீர் வளத்தை கருத்தில் கொண்டு

"விவசாய பயிர்களுக்கான ஆராய்ச்சி மையம்' அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். இதற்கான மனுவை முதல்வர், வேளாண் துறைஅமைச்சர், மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி உள்ளனர்.

## "உயிர் உரங்களை பயன்படுத்துங்கள்' விவசாயிகளுக்கு அதிகாரி அட்வைஸ்

கரூர்: ""உரச்செலவை குறைக்க, விவசாயிகள், உயிர் உரங்களை அதிகளவில் பயன்படுத்த வேண்டும்,'' என்று தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தார். இது குறித்து, அவர் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டம், தோகைமலை யூனியன் பகுதியில் பருவ மழை பெய்து வருவதாலும், காவிரிப்பகுதியில் விவசாய பயன்பாட்டிற்கு தண்ணீர் திறந்திருப்பதாலும், விவசாயிகள் பல்வேறு விதமான பயிர் சாகுபடிகளை செய்ய துவங்கியுள்ளனர். விவசாயிகள் அதிக மகசூல் பெற, செயற்கை உரங்களை தொடர்ந்து உபயோகிப்பதால், செடிகள் மண்ணிலிருந்து உயிர்ச்சத்துகளை தேவையான அளவு உறிஞ்ச முடிவதில்லை. இது மட்டுமின்றி சுற்றுப்புற சூழ்நிலையும் மாசுபடுகிறது. எனவே, இயற்கை உரங்களை பயன்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து, பயிருக்கு கிடைக்கும் வகையில், மாற்றித் தரும் நுண்ணுயிர்களை உரமாக பயன்படுத்துவதால், உயிர்உரம் எனப்படுகிறது. அசோஸ்பைரில்லம் என்ற பாக்டீரியா நுண்ணுயிர் செடிகளின் வேர்ப்பகுதியுடன் ஒட்டிக் கொண்டு வளரும் தன்மையுள்ளது. வேர்களைச் சுற்றி, இவை வாழ்வதால், இவற்றால் நிலைப்படுத்தப்படும் தழைச்சத்து சுலபமாக பயிருக்கு கிடைக்கிறது. அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தை காய்கறிகள், பழமரங்கள், மலர்கள், கரும்பு பருத்தி, நெல் மற்றும் சிறு தானியங்கள் போன்ற பயிர்களுக்கு பயன்படுத்தலாம். பாஸ்போபாக்டீரியா உயிர் உரம் மண்ணில் கரையாத மணிச்சத்தை கரைத்து பயிர்களுக்கு கிடைக்கும் வகையில், மாற்றித் தருகிறது. தாவரங்களின் வேர்கள் செழித்து வளரவும். பயிர்களின் இனப்பெருக்கத்திற்கும் தரமான தானிய மகசூலுக்கும் மணிச்சத்து மிகவும்

இன்றியமையாதது. உயிர் உரங்களை, விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். நாற்றுக்களை, உயிர் உர கரைசலில் நனைத்து நடவு செய்யலாம். நடவு வயலில் அல்லது விதைப்பு வயலில், நடவிற்கு முன் அல்லது விதைப்பதற்கு முன், தொழுஉரத்துடன் கலந்து வயலில் இடவேண்டும். உயிர் உரங் களை பயன்படுத்துவதால், மண் வளம் காக்கப்படுகிறது. தொடர்ந்து பயிர்களுக்கு சத்துக்களை உற்பத்தி செய்து கொடுக்கும். உரச்செலவு குறைகிறது. பயிர்களின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. சில உயிர் உரங்கள் பயிர் வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்து, பயிரின் வளர்ச்சியை அதிகரிக்கிறது. சுற்றுப்புறசூழல் பாதுகாக்கப்படுகிறது. மகசூல் அதிகம் கிடைக்கிறது. எனவே, விவசாயிகள் உயிர் உரங்களை பயன்படுத்தி பயனடைய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**<u>நேரடி நெல் விதைப்பு முறை: கலெக்டர் நேரில் ஆய்வு</u>**

தஞ்சாவூர்: வேளாண்மை பொறியியல் துறை சார்பில், நேரடி நெல் விதைப்பு, பண்ணை கழிவுகளை தூளாக்கும் கருவி மற்றும் சூரிய தி மின் மோட்டார் ஆகிய செயல்முறை விளக்கம், தஞ்சை அருகே, ஈச்சங்கோட்டை மற்றும் சோழபுரம் பகுதிகளில் நடந்தது. இதில், கலெக்டர் சுப்பையன் பங்கேற்று ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது: நேரடி நெல் விதைப்பு செய்வதால், நாற்றுகள் தயார் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு தண்ணீர் அதிகம் தேவையும் இல்லை. சரியான இடைவெளியில் விதைகள் விதைக்கப்படுவதால், இயந்திரகளை எடுப்பான்களை கொண்டுகளை எடுக்கலாம். நேரடி நெல் விதைப்புக் கருவி மூலம் நாள் ஒன்றுக்கு, 8 முதல் 10 ஏக்கர் வரை விதைக்கலாம். அதே போல், ஆரோக்கியசாமி தோட்டத்தில் பண்ணை கழிவுகளை தூளாக்கும் கருவி மூலம் விவசாய கழிவுகள், இக்கருவி மூலம் தூளாக்கி காண்பிக்கப்பட்டது. இந்த கருவியின் மூலம் விவசாயக் கழிவுகளான வாழை மரம், மரக்கிளைகள் மற்றும் தென்னை மட்டை கழிவுகள் தூளாக்கலாம். சோலர் பேனல் மூலம் இயங்கும் சூரிய ஒளி மின் மோட்டார் பயன்பாடு விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். இதற்கு, 80 சதவீதம் மானியம்

வழங்கப்படுகிறது. மின்சாரமே இல்லாத இடங்களில் இயங்கக்கூடிய இந்த மோட்டார் மூலம் குறைந்தபட்சம், 4 ஏக்கர் வரை விவசாயம் செய்யலாம். இவ்வாறு தெரிவித்தார். கூட்டத்தில், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆரோக்கியசாமி, உதவி செயற்பொறியாளர் மோகனகிருஷ்ணன், உதவி பொறியாளர்கள் வன்னியராஜ், ரவீந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>காபி விதை தேவைப்படுவோர் முன்பதிவு செய்ய அழைப்பு</u>**

போடி: காபி விதை தேவைப்படும் விவசாயிகள் முன்பணம் செலுத்தி விதையை பதிவு செய்து கொள்ள வேண்டும், என போடி காபி வாரிய முதுநிலை தொடர்பு அதிகாரி ஸ்ரீ தேவி தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது: மத்திய அரசின் காபி வாரியமானது ஆண்டு தோறும் விதைக்காப்பியை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. தற்போது இந்த ஆண்டு பருவத்திற்கு தேவையான அங்கீகரிக்கப்பட்ட காபி ரக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. விதை தேவைப்படும் விவசாயிகள் கிலோவிற்கு 200 ரூபாய் முன்பணமாக செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். காபி விதை விநியோகம் செய்யும் போது 5 சதவீதம் கூட்டு வரியை செலுத்த வேண்டும். விதைக்காபிக்கான முன்பணத்தை விண்ணப்பத்துடன் வரும் அக்., 31ம் தேதிக்குள் காபி வாரிய அலுவலகத்தில் செலுத்த வேண்டும். இது பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள போடி சுப்புராஜ் நகரில் உள்ள காபி வாரிய அலுவலகத்தில் நேரிலோ அல்லது 04546 - 280397 எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு கூறினார்.

**<u>பெருஞ்சாணி அணையில் தண்ணீர் திறப்பு;</u>**

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் இரண்டு வார காலமாக பெய்து வந்த மழை தற்போது மாறி வெயில் அடிக்கிறது. ஒரு சில இடங்களில் மட்டுமே சாரல் மழை பெய்கிறது. இதனால் விவசாயத்துக்காக பெருஞ்சாணி அணையிலிருந்து நேற்று காலை முதல் 200 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த அணையின் நீர்மட்டம் 71.30 அடியாக உள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 28.55 அடியாக உள்ளது. மாம்பழத் துறையாறு அணையில் இருந்து 14 கனஅடி தண்ணீர் உபரியாக திறந்து

விடப்படுகிறது. நாகர்கோவில், முள்ளங்கினாவிளை, குருந்தன்கோடு ஆகிய இடங்களில் லேசான சாரல்மழை பெய்தது.